**செய்தி வெளியீடு**

**செய்தி வெளியீடு எண்.27/2023** **நாள் : 31.03.2023**

**சென்னை குடிநீர் வாரியத்தின் தலைமை அலுவலகம் 03.04.2023 முதல் சென்னை, சிந்தாதிரிப்பேட்டையில் புனரமைக்கப்பட்டுள்ள அலுவலக கட்டடத்தில் முழுமையாக செயல்படும்.**

**சென்னை குடிநீர் வாரியம் தகவல்**

சென்னை குடிநீர் வாரியத்தின் தலைமை அலுவலகம் 03.04.2023 **முதல் சென்னை, சிந்தாதிரிப்பேட்டையில் புனரமைக்கப்பட்டுள்ள அலுவலக கட்டடத்தில் முழுமையாக செயல்படும்.**

சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள சென்னை குடிநீர் வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டதால் 2020ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் சென்னை எம்.ஆர்.சி நகரில் உள்ள நகராட்சி நிர்வாக ஆணையரக அலுவலக கட்டடத்தில் தற்காலிகமாக செயல்பட்டு வந்தது. இந்நிலையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 13.03.2023 அன்று புனரமைக்கப்பட்ட தலைமை அலுவலக கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.

அனைத்து பணிகளும் தற்போது முடிக்கப்பட்டுள்ளதால் 03.04.2023 முதல் சென்னை குடிநீர் வாரியத்தின் தலைமை அலுவலகம், சிந்தாதிரிப்பேட்டையிலுள்ள புனரமைக்கப்பட்ட அலுவலக கட்டடத்தில் முழுமையாக செயல்படும். எனவே, பொதுமக்கள் / நுகர்வோர்கள் குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வரி, குடிநீர் கட்டணங்கள், புதிய குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பு போன்ற விவரங்களைப் பெறுவதற்கு சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள தலைமை அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம். கூடுதல் விவரங்களை, 24 மணி நேரமும் செயல்படும் தலைமை அலுவலக கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு மையத்தின் தொலைபேசி எண்.044-4567 4567–ல் தொடர்பு கொள்ளலாம்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்**
**சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்**